# ஆசைக்கனல்

மின்சார விசிறியை முடுக்கிவிட்டுக் கொண்டு அதனருகே அமர்ந்து ஈரக் கூந்தலைப் பிரித்து உலர்த்திக்கொண்டிருந்தாள் சகுந்தலா.

அந்த நாள் ராஜாதிராஜர்களும் ராணிமாரும், பணிப்பெண்கள் வெண்சாமரத்தினாலே வீசிய காற்றில் இளைப்பாறினார்கள். யாரையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லாமல். இந்த நாளில் மின்சார விசிறி காற்று வழங்குகிற நேர்த்திதான் என்னே! அதிசய சிருஷ்டி!

"மாமியைப் பார் அம்மா. தலை உலர்ந்தாச்சு. நான்தான் எண்ணெய் தேய்த்துக்கொண்டு நாள் முழுதும் மயிரை ஆறப்போட்டுக்கொண்டு பிசாசாட்டம் சுற்ற வேண்டியிருக்கு!" என்று மைதிலி சிணுங்கினாள்.

கவனம் திரும்பி எங்களை ஜன்னலருகே கண்டுவிட்ட சகுந்தலா, முகத்தில் மலர்ச்சியுடன், "ஓ, நீங்கள் வந்திருப்பதைப் பார்க்கவில்லையே நான்! இந்த விசிறியின் சப்தத்தில் தெரியவில்லை" என்று சொல்லிவிட்டு, விசையை நிறுத்தித் தலையை முடிந்துகொண்டு எழுந்தாள்.

நாங்கள் நின்றிருந்த இடம் எங்கள் வீட்டை ஒட்டிய மண் தரை; ஜன்னல் சகுந்தலாவின் வீட்டுப் படுக்கையறையைச் சேர்ந்தது. அந்த அறையிலிருந்த பெரிய நிலைக்கண்ணாடியில், என் முகமும் மைதிலியின் முகமும் தெரிந்தன.

"இந்த மாமி புத்தம்புது நிலைக்கண்ணாடியை வாங்கிவிட்டு, அதனண்டை தலைபின்னிக்கொள்வதே கிடையாது" என்று குற்றஞ்சாட்டியபடி, சகுந்தலாவை நோக்கி முறுவலித்தாள் என் பெண் மைதிலி.

"தலை பின்னிக்கொள்ளவும் ஈரத்தலையை உலர்த்திக்கொள்ளவும் எனக்கு இந்த இடம்தான் வாட்டம்!" என்று சொல்லிச் சிரித்துவிட்டு சகுந்தலா ஜன்னலுக்கு வந்தாள். "எங்காத்துக்கு வாயேன்; ஒரு சமாசாரம்" என்று அழைத்தேன். தீபாவளியையொட்டிச் சில பட்டுப் புடவைகளைக் கலெக்டர் கிருஷ்ணனகத்தில் வரவழைத்திருந்தார்கள். நாங்களும் பார்வையிட்டு வாங்கிக் கொள்ளலாம் என்று எங்கள் வீட்டிற்கு அனுப்பியிருந்தார்கள். எங்கள் வீட்டில் இந்த வருஷம் தலைதீபாவளி, மைதிலிக்கு.

கும்மாளமாக ஓடி வந்து புடவைகளைப் பார்வையிட்டாள் சகுந்தலா. "மாமீ, அவர் வருவதற்கு மத்தியான்னம் இரண்டு மணியாகுமே!" என்றாள்.

"சாயங்காலம்தான் புடவைகளைத் திருப்பியனுப்பப் போகிறேன்; அவர் வந்து சொல்லட்டுமே!" என்று நான் கூறியதும், பூரித்தாள். "பட்டுப் புடவைகளைக் கையில் எடுத்துப் பார்க்கவே இன்று கூசுகிறது கை. தலையைக் கோதிவிட்டுக் கொண்டேனா? கையை நன்றாகத் தேய்த்து அலம்பிக்கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு, அவள் முன் யோசனையுடன் நடந்துகொண்டதும், மைதிலி, "மாமீ, தீபாவளியன்றைக்கு எண்ணெய்க் குளியானதும் உடுத்த வேண்டுமே!" என்றாள். "நான் சாயங்காலம் தான் உடுத்துவேன்!" என்று சிரித்தாள். சகுந்தலா. நாகப்பழ நிறத்தில் ஒரு புடவையைத் தேர்ந்தெடுத்தாள். "அவரையும் கேட்டுவிட்டுத்தான் வாங்குவேன்!" என்று சொல்லிவிட்டு, சந்தோஷமாகப் போனாள்.

ஆனால், சகுந்தலா எந்தப் புடவையையும் வாங்கவில்லை. அகமுடையானும் பெண்டாட்டியுமாக என்ன பேசிக் கொண்டார்களோ? நாலுபேர் பார்த்து மிச்சம் வைத்த சரக்கு. வாங்க நிர்ப்பந்தமா? 'தலைதீபாவளியாச்சே' என்று நான் இரண்டு புடவைகள் வாங்கினேன். மைதிலி என்னிடம், "ஏம்மா, இப்படிப் புடவையில் போடுகிற பணத்தைக் கொண்டு ஒரு நல்ல நிலைக் கண்ணாடியாக வாங்கேன்!" என்றாள்.

"வாங்கவேண்டிய அவசியம் வரும், வாங்கித் தருகிறேன்" என்று நமுட்டலாகச் சொன்னேன்.

"ஆமாம் போ! இப்ப சத்தியா நம்மாத்திற்கு ஒன்று வாங்கு. எனக்குப் புடவை வேண்டாம். அந்தப் பணத்தில் வாங்கு."

தாராளந்தான். இவள் சொன்னால் போமா? இவளுடைய புக்ககத்தார் நன்றாகத்தான் எங்களை மெச்சுவார்களே! எங்கள் மைதிலியின் மாநிறத்துக்கு வைரத்தோடுதான் எடுப்பாயிருக்குமாம். "எது செய்தாலும் செய்யாவிட்டாலும் தோடு போட்டு விடுங்கள்!" என்று சொல்லியிருக்கிறார்கள்! அப்படியிருக்க, நான் எங்கள் வீட்டுக்காக நிலைக்கண்ணாடியும், மின்சார விசிறியும் வாங்கிப் போட முடியமா? இந்த இரண்டும் எங்களகத்தில் இல்லையே என்று மைதிலிக்குக் குறை.

சகுந்தலாவிடம் சொல்லி வைக்க வேண்டும் என்று நினைத்தேன். "தீபாவளியன்றைக்கு மைதிலி உங்களகத்திற்கு வந்து, அந்த விசிறியண்டை தலையை உலர்த்திக்கொள்ளட்டும்; கூப்பிடு. 'பிசாசாட்டம் சுற்றணுமா?' என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாள்!" என்று சொன்னால், மைதிலி சீக்கிரம் கூந்தலை ஆற்றிக்கொண்டு, அவர்கள் வீட்டின் நிலைக் கண்ணாடியில் பார்த்து அலங்காரம் செய்துகொண்டு, தன் கணவனுக்கெதிரில் வந்து தன்னம்பிக்கையுடன் உலவுவாள்.

இல்லற வாழ்வின் புது உறவுகளைச் சுவைக்கக் காத்திருந்த மைதிலியின் உள்ளத்தில், எத்தகைய ஆனந்தக் காட்சிகள் நிழலாடிக்கொண்டிருந்தனவோ? அடுத்தகத்திலிருந்து வந்தவள், "அம்மா, குந்து மாமிக்குக் காதுவலியாம். தானாகவே மருந்து போட்டுக்கொண்டிருந்தாள்!" என்று தெரிவித்தாள். 'அவளுடைய கணவன் மருந்து போடக்கூடாதா?' என்ற எண்ணம்!

"நீ போடுகிறது தானேடி? மூர்த்தி இல்லையோ என்னமோ!" என்றேன்.

"வாசலிலே மாமா இருந்தாரே!" என்ற பதில் வந்தது.

இரண்டு நாளாகவே சகுந்தலா என் கண்ணில்படவேயில்லை. எனக்கு என்னவோ சந்தேகம். மூர்த்தி வேலைக்குப் புறப்பட்டுப் போனதைப் பார்த்துவிட்டு, நான் சகுந்தலாவைக் காணச் சென்றேன்.

"காது வலியாமே! என்ன மருந்து போடுகிறாய்" என்று விசாரித்தவாறு, அவளுடைய காதின் மேல்மயிரை ஒதுக்கப் போனேன். பஞ்சு வைத்திருந்த காதினை அடையாளங்கண்டு கொண்டேன். சகுந்தலா செவியைத் தொடவும் கூசினாள். பார்த்தேன். தங்கத்தகடு போன்ற செவி சட்டென நினைவு வந்தது.

"என் கண்தான் பட்டுவிட்டது, குந்து. நீ அன்றைக்குத் தலையை முடிந்து கொண்டே வந்தாயே, அப்பொழுது உன் காதுகளைப் பார்த்து 'மூவாயிரம் பெறுமான தோடு போடவேண்டும் என்று நினைத்துக்கொண்டேனம்மா. என் கண்ணேதான் பட்டிருக்கிறது" என்றேன்.

"அவருடைய கண்படவில்லை!" என்று ஒரு வரண்ட சிரிப்பு சிரித்தாள் சகுந்தலா. எனக்கு விளங்கவில்லை.

"என்ன மருந்து போட்டாய்?"

"க்ளிசெரின்."

"நீயே போட்டுக்கொள்கிறாயாமே! சரியாக விழுமா? மூர்த்தியைப் போடச் சொல்லப்படாதோ?"

"ஆஹா, போடுவார்!"

"ஏன், போடமாட்டாரா?"

"வலி வந்தன்னைக்குப் போடச் சொன்னேன் மாமி. ராத்திரி தூக்கங் கொள்ளமல் ரொம்ப வலித்தது. மருந்து போடுவாராக்கும் என்று சொன்னேன்; முனகினார். நானே போட்டுக்கொண்டுவிட்டேன்; கஷ்டமா? புது இங்க்பில்லர் இருக்கு; போட எளிது".

"மருந்து போடவா முனகியிருப்பார்? தூக்கக் கலக்கமாயிருக்கும்".

"இல்லையே, நல்ல விழிப்புத்தான்; அதனால்தான் மருந்து போடுவார் என்று நிச்சயமாக நம்பினேன்! சாயங்காலமே புடவையைப் பற்றி ஏதோ பேச்சு - அது தான் . . . ."

'ஓஹோ!' என நான் திகைத்தபொழுது, சகுந்தலா, 'ஆ, ஊ' என்று முகஞ்சுளித்துக் காதைப் பொத்தி அணைத்தாள்.

"நான் சொல்றேன் கேள், குந்து. புடவை வாங்காவிட்டால் பாதகமில்லை. இப்படியே கொஞ்சங் கொஞ்சம் கூட்டிச் சேர்த்து, ஜம்மென்று வைரத்தோடு வாங்கிப் போட்டுக்கொள்ளப் பார்" என்றேன். உண்மையாகவே எனக்குக் குறைதான், அவளுக்கு வைரக்கம்மல் இல்லையே என்று. என்னென்னவோ வாங்குகிறாள், அணிகிறாள், உடுத்துகிறாள் - அவளுக்குப் பொருத்தமாகவே இருக்கின்றன. எனினும் ஒரு ஜோடி வைரக்கம்மல் அணிந்துகொள்ளட்டும்; ஸ்ரீ சக்ரமும் பஞ்சாட்சரச் சக்கரமும் செவிகளில் அணிந்த அம்பிகைபோல இருப்பாள். 'செந்தாழைப் பூ மடல்போல' என்று தேவி ஸ்தோத்திரத்தில் வருகிறதே, அப்படிப்பட்ட அழகுச் செவிகள் சகுந்தலாவுக்கு. ஐந்தாறு தினுசு காதணிகளும் கழுத்து மாலைகளும் வேண்டவே வேண்டாம். வேண்டியிருக்கவில்லை எனக்கு!

"தெரிஞ்சுதா?" என்றேன்.

"அச்சச்சோ, அது வேறேயா எனக்கு! காது வலிக்கு இரண்டு சொட்டு மருந்து போடக் கஷ்டமாம். வைரத்தோடு வாங்கிப்போட எத்தனை சீக்கிரம் மனசு வந்துவிடும்!" என மறுமொழி விழுந்தது.

கலகலவென்று சிரித்துக்கொண்டே மைதிலி வந்தாள். சகுந்தலாவின் பேச்சில் நகைச்சுவை அத்தனை இருக்கிறதா?

சகுந்தலாவும் சிரிக்க முயன்றாள். "ஆ!" என்று புருவம் தெறித்து "பேசினால் கூட வலி!" என்று அவள் சிணுங்கியதும், "அதனாலே அவரோடு பேசுகிறதில்லையாக்கும்!" என்று கேட்டுவிட்டேன்!

"பேசாமலிருப்பானாக்கும் இதற்காக!" இப்படிச் சொன்னவள் மைதிலி! ஒருவரோடு மற்றவர் பேசிக்கொள்ளாமலே ஒரே வீட்டில் வளைய வர தம்பதிகளுக்கு சாத்தியம் என்பது மைதிலிக்குத் தெரிய நியாயமில்லை. தம்பதிகளுக்குள்ளே புரைசல், மனவேற்றுமை, மோனம் முதலியன ஏற்படக்கூடும் என்ற கற்பனையே மைதிலிக்கு இல்லையோ!

அதற்கு மேல் தூண்டித்துருவிக் கேட்காமல் திரும்பிவிட்டேன். தாம்பத்யம் கலகம். ஆதாரமில்லாமல் அசட்டுப் பிசட்டென்று கிளம்பியிருக்கும். கேட்பானேன்?

அவர்களது பிணக்கு, கறந்து கொணர்ந்த பச்சைப் பாலின் நுரைபோல் அடங்கிவிடும் என்று எதிர்பார்த்த எனக்கு, அனலின்மீது காயும் பால்தான் பொங்குகிறது என்று விரைவில் தெரிந்தது. விரைந்தேன். புத்தகம் வாசித்துக் கொண்டிருந்த சகுந்தலா என்னை வரவேற்று உட்கார்த்தினாள். அவளுடைய காது வலி சற்று குறைந்தது என்பதைத் தெரிந்துகொண்ட பின்பு, "மூர்த்தி எங்கே!" என்று கேட்டேன். கையை மடித்து, கட்டை விரலை நீட்டி வாசலைக் குறிப்பிட்டாள்.

"மூர்த்தியைக் கேட்கணும். கதர் வேஷ்டிதான் வாங்கணுமாம் மாப்பிள்ளைக்கு. எங்கே கிடைக்கும் என்று விசாரிக்கணும்" என்று சொல்லி வைத்தேன். எங்ககத்துக்காரருக்குத் தெரியாத விஷயமா?

"மூர்த்தியைக் கேட்டுச்சொல்லு" என்றேன்.

"நீங்களே கேட்டால் நல்லது மாமி" என்றாள் குந்து.

இந்தச் சமயத்தில் மூர்த்தி கையில் பத்திரிகையுடன் வாசலிலிருந்து வந்து, "என்ன?" என்றார். சொன்னேன்.

"மாமாவுக்குத் தெரியாதா என்ன? உங்களுக்கு அவருடைய சாமர்த்தியத்திலே நம்பிக்கையில்லை போலிருக்கு!" என்று மூர்த்தி கொடுத்த விடையையும் வாங்கிக் கட்டிக்கொண்டேன்.

"உங்கள் தீபாவளி ஜவுளி என்ன?" என்று கேட்டு வைத்தேன். "அமளிதான்" என்று சகுந்தலா முணுமுணுத்ததும், மூர்த்தி "அமைதிதான்" என்று மாற்றிச் சொல்ல விரும்புகிறவர்போன்று நடந்து சென்றுவிட்டார்! நேர்முகமாகப் பேசிக் கொள்ளாத அவ்விருவரையும் பேச வைக்க எனக்குத் தெரியவில்லை. பொங்கும் பாலில் நாலு சொட்டுத் தண்ணீர் தெளித்துவிட்டு வந்துவிட்ட மாதிரி கையாலாகாத்தனம் எனக்கு. தணலைத் தணிக்கவில்லை; பாலை இறக்கிவிடவில்லை.

அப்படியென்ன மனத்தாங்கல் அவர்களுக்குள்? புடவையைப் பற்றிய புரைசல்தானா - திரௌபதிக்குக் கண்ணன் கொடுத்த துகிலைப்போல நீளுகிறது!

வைரக்கம்மல்-விஷயமாக இருக்குமோ? நானறிந்த வரையில் அவளுக்கு அந்த ஆசை அப்படியொன்றும் தீவிரமாகக் கிடையாது. எண்ணம்தான், கொஞ்ச நாளாக.

ஒரு நாள் பாங்கும் பொருத்தமுமாக மடிசார்ப் புடவை உடுத்தினாள். கூடியிருந்த பெண்டுகள் நாங்கள் பல பேர் அவள் அளித்த எழிற்காட்சியை மெச்சினோம். வயது முப்பது ஆகிவிட்டால், இப்படியே சம்பிரதாயமாக உடுத்தப் போவதாகச் சொன்னாள் சகுந்தலா. அப்போது டாக்டர் சீதாபதியின் மனைவி, "கொரநாடுப் பட்டும் வைரக்கம்மலும்தான் மடிசார்ப் புடவைக்கு ஏற்றவை" என்ற அபிப்பிராயம் தெரிவித்தாள். நன்றாகக் கல்வி கற்று, சமூகப் பணியிலும் ஈடுபடுகிற அந்த மாது சொன்னதைப் புறக்கணிக்க சகுந்தலாவுக்கு முடியவில்லை. நானும், "பார்த்தாயா, கேட்டாயா?" என்று உசுப்பிவிடவே, "சரி மாமி, நீங்களும்தான் சொல்கிறீர்களே! உங்கள் திருப்திக்காகவாவது நான்கைந்தாண்டுகளில் வைரத்தோடு போட்டுக்கொள்ளப் பார்க்கிறேன்!" என்று சொன்னாள். எத்தனை வாதங்கள் முன்பு செய்திருக்கிறோம் அவளும் நானும்!

"எட்டு தினுசு எதற்கு? அந்தப் பணத்தில் வைரத்தோடு வாங்கலாம்" என்று பல தடவை நான் சொன்னதுண்டு. சிரித்துப் பூசியிருக்கிறாள்.

"ஒரு ஆபத்து, அவசரம் என்றால், கட்டின புடவையோடு நகைகளை வாங்கிக் கொண்டு ஓட முடியும்! இரும்பு பீரோவும் நிலைக் கண்ணாடியும் அப்படி உதவுமா?" என்று நான் கேட்டிருக்கிறேன்.

"திருடனுக்கும் நகைகளை வாரிக் கொண்டு ஓட எளிசு!" என்றாள் அவள்.

"நகைகள் பணத்தட்டுக்கு உதவும்; அவை துணையாகும் பெண்களுக்கு!" என்று நான் சொன்னதற்கு, "பெண்களுக்கு நகை அழகு செய்யத்தான்!" என்றாள். அவளுடைய பாட்டிகூட, மாதம் ஐந்து பத்தாவது ஒதுக்கி வைத்து, எப்பொழுதாவது தோடு வாங்கி விடணும் என்று சங்கற்பம் செய்து கொள்ளும்படிச் சொன்னாளாம். "அந்த ஸ்மரணையாகவே இருக்கணுமா வருஷக் கணக்கிலே!" என்று எதிர்க் கேள்வி கேட்டாளாம் இந்தப் பேத்தி.

அத்தகையவளை, வைரக்கம்மல் வெறி இத்தனை பிணங்கும்படி ஆட்கொள்ளுமா? பிளாஸ்டிக்கில் பொம்மை ரேடியோவைப் பார்த்தாலும் ஆசை. டெலிவிஷன் ரேடியோவைப் பற்றி விளம்பரம் படித்தாலும் சப்புக்கொட்டும் உற்சாகம். எல்லா நல்ல பொருள்களையும் பார்த்து மகிழும் ஆர்வம். அப்படிப்பட்டவள் 'வைரம்' நாட்டமே இல்லாமல் இருந்தாள்! திடீரென்று வெறியோ?

"காதுக்கு சொட்டு மருந்து போடாதவர், தோடு வாங்கிவிடுவாராக்கும்!" என்று சினந்தாளே! அந்த அனலில் அவளுடைய கற்பனை வைரக்கம்மல் கருகிவிட்டதோ, பாவம்! ஆச்சரியந்தான்!

சகுந்தலாவின் வைர நெஞ்சில் "வைரக்கம்மல் வேண்டாம்" என்ற உறுதி கருகி, நெஞ்சிலே கம்பலை கோத்துக் கொண்டுவிட்டது என்றால், என் நெஞ்சம் நம்ப மறுக்கிறது.

"நிச்சயமாக வருகிறார் நம் மாப்பிள்ளை" என்று எங்களுக்குத் தகவல் வந்துவிட்டது. நான் இந்தத் தகவலுக்காகக் காத்திருக்கவில்லை. பெண்டாட்டி மைதிலியைப் பார்க்க அவருக்கு ஆவல் இராதா? இதோ, இப்பொழுது பிணங்கிக் கொண்டிருக்கிறார்களே, இந்த மூர்த்தி தம்பதி?

ஆறேழு வருடங்களுக்கு முன்பு . . .

தலைதீபாவளிக்குப் போக வேண்டிய மாப்பிள்ளை என்ற ஹோதாவில் மூர்த்தி காத்திருந்தார். வேட்டகத்தாருக்கு ஏதோ அசுபமான அசௌகரியம் ஏற்பட்டுவிட்டது; அவர்கள் தீபாவளியைக் கொண்டாடுவதற்கு முடியவில்லை. மூர்த்திக்கு ஏமாற்றம்.

"இங்கேயே கங்கா ஸ்நானம் செய்துவிடலாம். எங்களகத்தில் பண்டிகை உங்களுக்கு!" என்று நாங்கள் அழைத்தோம். அந்த ஆறுதல் மூர்த்தியின் உள்ளத்தில் ஒட்டுமா? யானைப் பசிக்கு சோளப் பொரியா?

அந்த வருஷம் தீபாவளி சமயம் குளிர்தான். குழந்தைகளுக்குக் குளிர் காற்று வீசுமே என்று வாசற் கதவைத் தாளிட்டிருந்தேன். கம்பிக் கதவுகளை மட்டும் தான் சாத்துவது வழக்கம், வருஷத்தில் பதினோறு மாதம், வாசற் கதவு தட்டப்பட்ட ஓசை கேட்டுத் திறந்தேன். மூர்த்தியை எதிர்பார்த்துக்கொண்டு நானிருந்தோம். அதிகாலைக்குள் கங்கா ஸ்நானம் செய்ய வேண்டுமாதலால், எங்களகத்திலேயே தூங்க வரச் சொன்னோம்.

மூர்த்தி வெளியில் நின்றிருந்தபடியே, தோளில் போட்டிருந்த துவாலையினால் முகத்தைத் துடைத்துக் கொண்டே, "அப்பா, புழுக்கம்! எங்கேயாவது ஓடிவிடலாம்போலிருக்கு" என்று முனகியதும், நான் துணுக்குற்றேன்.

'விரகதாபம் இதுதானா? சந்திரன் தகிக்கிறான், தண்ணிலவு சுடுகிறது' என்று கவிகள் வர்ணிக்கிறார்களே! புழுங்குகிறதாமே, இந்தச் சிலுசிலுப்பில்!

"ஓடணும் என்றுதான் பார்த்தீர்கள்; தடை வந்துவிட்டதே" என்று பதிலளித்து, கதவைத் திறந்து வழிவிட்டேன். மறுமொழி வரவேயில்லை. உள்ளே வந்த பிள்ளையைப் பார்த்தேன். முகம் சாம்பிக் கிடந்தது. வேட்டகத்தில் இருக்க வேண்டிய நாள் அல்லவோ!

மறுநாள் காலையில் ஸ்நானம் முடிந்த பிறகு, மூர்த்தி தமது புது ஆடைகளை உடுத்திக்கொண்டு எங்களை நமஸ்கரித்தார்.

"நீங்கள் உங்கள் பணத்தில் வாங்கிக் கொண்டு புதுசு உடுத்துகிறீர்கள்; ஆனால், பண்டிகையை எங்களுடன், எங்களில் ஒருவராக இருந்துகொண்டு, அனுபவிக்க வந்திருக்கிறீர்கள் என்று எனக்கு ரொம்ப சந்தோஷம்" என்றார் மைதிலியின் அப்பா.

நான், "இந்தத் தீபாவளியின் ஏமாற்றத்தை உங்கள் மனைவியும் ரொம்பக் கஷ்டப்பட்டுப் பொறுத்துக் கொள்வாள். உங்கள் பெற்றோர் புதுப் புடவையை அவளுக்கு அனுப்பினால் போதுமோ?" என்றேன்.

அப்பொழுது மைதிலி 'திடுதிப்'பென்று, "ஏன் மாமா, உங்கள் சகுந்தலா மாமியையும் உங்களையும் உங்கள் அப்பா அம்மா கூப்பிடக் கூடாதோ? உங்காத்திலே பண்டிகை இருக்கிறது என்றீர்களே! உங்கள் மாமனார் வீட்டில்தானே பண்டிகை இல்லை?" என்று ஒரு அயனான கேள்வி கேட்டாள்!

பாவாடையும் தாவணியுமணிந்த பன்னிரண்டு வயதுக் குமரி மைதிலி அப்படிக் கேட்டாள்! அந்த வயதில் மணவாழ்வின் இனிமை கற்பனையில் தேங்கியிருக்கும் என்பதை இந்த நாளில் யார் நினைக்கிறார்கள். நினைத்தும் பயன்? எங்கள் மைதிலிக்குப் பதினைந்து வயது முதலே வரன் பார்த்தும் கலியாணம் நடக்க மூன்று வருஷம் தாமதம்!

மைதிலி கேட்ட அந்தக் கேள்வியை மூர்த்தியின் அந்தரங்கம், காதல் உள்ளம், எத்தனையோ தடவைகள் கேட்டிருக்கும், ஆனால் பெற்றோரிடம் "அவளை நீங்கள் அழையுங்கள்; நானும் வருகிறேன். எங்கள் தலைதீபாவளி என் வேட்டகத்தில்தான் நடக்க வேண்டும் என்று உண்டா? என் மனைவி நம் வீட்டுப் பெண்தானே இப்பொழுது? அவளுடைய பெற்றோருக்குத்தானே தாயாதித் தீட்டு! பண்டிகை எங்களுக்கு வேண்டும்" என்று சொல்லத் துணிவு இருந்திருக்காது. எனக்கும் தோன்றவேயில்லை யோசனை. தோன்றியிருந்தால் கொஞ்சம் தூண்டியிருக்கலாம்.

அந்தத் தீபாவளிக்குப் பிறகு ஆறு மாதங் கழித்து மனைவி சகுந்தலாவுடன் குடித்தனம் வைத்தபொழுது, ஆசைப்பட்டு, அல்லல்பட்டு, எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் வீடு பிடித்து வந்து குடிபுகுந்தார் மூர்த்தி. எங்களிடம் ரொம்ப அபிமானமும் ஒட்டுதலும உண்டு. "ஓடப் பார்த்தீர்கள்" என்று நான் அறிந்து சொன்ன அன்பை நினைத்து, என்னிடமும் பக்தியும் உண்டு.

உப்புப் பெறாத விஷயத்திற்கு இப்பொழுது சண்டை; பிகு. அந்த அனுபவங்களை மறந்தாயிற்று!

அவர்களிடையே சமாஸம் ஏற்படுத்தத் துடிப்பு எனக்கு. அவர்களது பெற்றோர்களோ அல்லது அவர்கள் பெற்ற மக்களோ இருந்தால் அந்த தாம்பத்தியக் கலகம் என் வீட்டு வாசற்படி ஏறுமா?

நான் சென்றபொழுது, இருவரும் மும்முரமாக ஆளுக்கொரு தமிழ்ப் பத்திரிகையை வைத்துக் கொண்டு ஒரே அறையிலே மூலைக்கொருவராக இருந்தபடி படித்துக்கொண்டிருந்தார்கள். 'கொஞ்சம் குணம்' என்று ஊகித்தபடியே, "காது வலி குணமாச்சா?" என்று கேட்டபடி சகுந்தலாவின் அருகு அமர்ந்தேன்.

"பேஷாகக் குணமாச்சு!" என்று பதில் வந்த தோரணையுண்டே, கங்கை நதியை அணுகாமலே கங்காஸ்நானம் செய்கிற திருப்தியையும் மிஞ்சுகிற மாதிரி, அத்தனை மனநிறைவுடன் வெளிப்பட்டது!

"எனக்கு இப்பொழுது காது வலி!" என்று மூர்த்தி உற்சாகமாகச் சொன்னதும், "காது வலி கூட ஒட்டுவாரொட்டியா?" என வினவி நகைத்தேன். சண்டையாயிருந்தாலும், பெண்டாட்டியின் காதுவலியைத் தன்னிடம் ஈர்த்துக் கொண்டு, அவளுக்கு நன்மை செய்ததாக எண்ணி என்ன உற்சாகம்! என்ன திருப்தி!

"மருந்து ஊற்றக்கூட வராதவருக்கு . . . " என்று சகுந்தலா மொண மொணத்தாள்.

"என் கண் திருஷ்டியால்தான் உனக்கு வந்தது என்று நினைத்தேனே! மூர்த்திக்கு யார் திருஷ்டிபட்டது?"

"எனக்கு மருந்து போட முனகினதற்குத் தண்டனையாக வந்திருக்கும், மாமி!"

இன்னுமா இத்தகைய பதில் பேசுவாள் ஒருத்தி! நாலு நாளாகவா இப்படி ஒரு பூசல்! சட்! இருவரில் ஒருவர் தாழக் கூடாது? பேச்சுத் துணையில்லாமல், பொழுது போகாமல், காதைக் குடைந்து குடைந்துதான் வலி!

"ஏண்டி, சும்மாவானும் சொல்லாதே! உங்கள் சண்டை மருந்து விஷயமாகவா? புடவை, நகை பற்றியா? உங்கள் தலை தீபாவளியின் பொழுது இந்த மாதிரி விஷயங்களைப் பற்றியா நீங்கள் ஆசைப்பட்டுக் காத்துக் கிடந்தீர்கள்? 'புடவையைப் பார்க்க வரச் சொல்லிக் கலகம் எண்ணிவிட்டேனா' என்று எனக்கு வேதனையாயிருக்கிறதம்மா!" என்று என் துடிப்பை எல்லாம் வடித்துக் கொட்டிவிட்டேன். குளிர் நாளில் வெப்பம் என்று அவதியுற்ற அதே மூர்த்தி, என் எதிரில் அதே பாவனையில் இருந்தார்; தாங்கவில்லை எனக்கு.

சகுந்தலா தளர்ந்த குரலில், தயங்கியவாறே சொன்னாள்: "மாமீ, செயலில் ஒன்றுமே வேண்டாம். புடவை வாங்கித் தர வேண்டாம். மருந்து போடவும் ஓடோடி வரவேண்டாம். எண்ணங்கூடவா இருக்கக் கூடாது? அதுதான் பொறுக்கமாட்டேனென்கிறது."

"எண்ணம் இல்லை என்று கண்டாயா?" என்று கேட்டேன் நான்.

"காணணுமா? தெரியாதா பேச்சிலிருந்தே! புடவைகளை எடுத்துக்கொண்டு காட்ட வந்ததுமே - அப்பப்பா. என்ன சிடுசிடுப்பு! முகத்தைப் பார்க்கணுமே!"

"உடனே 'டு' சொல்லிவிட்டாயாக்கும், அவசரக்காரி" என்றேன்.

"எனக்கு ஒரு அவசரமுமில்லை, மாமி. முகத்தைச் சுளுக்கிக்கொண்டு இவர்தான், 'இந்தப் பொம்மனாட்டிகளுக்குத்தான் என்ன அவசரம், பேராசை!' என்று பொதுவாய்ச் சொல்கிறமாதிரி என்னைத் திட்டினார். 'அவசரக் குடுக்கை, சுரக் குடுக்கை' என்று பட்டங்களைத் தாராளமாக வழங்கிவிட்டார்!"

மூர்த்தி தொண்டையைக் கனைத்துக் கொண்டு என்னை நோக்கினான். "அவசரக்காரி என்று சரியாய்ச் சொன்னீர்கள், மாமீ. நான் மெனக்கட தயாராம் கடையில் பட்டுப் புடவைகள் வந்திருக்கு என்று கேள்விப்பட்டுப் போய்ப் பார்த்துப் புடவையையும் பொறுக்கி வைத்திருந்தேன். திடுதிப்பென்று வாங்கிக்கொண்டு வரணும் என்று பணத்துக்குக் காத்திருந்தேன். இவள் ஒரு புடவை மூட்டையுடன் வருகிறாள்! 'எதிர்பாராத பரிசு வாங்கிக் கொடு பெண்டாட்டிக்கு' என்று புத்தகத்திலே போட்டுவிடுகிறான்கள். அதை இவர்கள் படித்தும் காட்டுகிறார்கள் நமக்கு. புருஷனுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தால்தானே? அவசரக்காரி என்று சொல்லக்கூடாதோ? . . . "

இந்தச் சமயத்தில் சகுந்தலா கணவனைப் பார்த்த பார்வை! ஆசைக் கனல் பொரி பறந்தது.

சந்தோஷமும் சங்கோசமும் ஒருங்கே தோன்ற என்னைப் பார்த்துமென்று விழுங்கினாள். "நான் எதிர்பாராததாக வாங்கித் தரணும் என்றால் முடியுமா, மாமி? ஓரணாப் புச்சாம் முதற்கொண்டு ஓராயிரம் ரூபாய் வஸ்து வரைக்கும் என் மனசில் பட்டியல் இருக்கும்பொழுது, எதைத்தான் அவர் வாங்கிக் கொடுக்கட்டுமே, நான் குறி வைத்ததாகவே இருக்கும்! அவருக்கு எண்ணமும் ஆசையும் இருக்கிறது என்று தெரிந்தாலே போதுமே!" என்று சொல்லித் தடுமாறினாள்.

"உளறாதே; அதுதான் தெரிந்துவிட்டதோல்லியோ! நீ நினைக்கிறதையும் கொஞ்சம் மாற்றிப்பார். 'காதுக்கு மருந்து போடக் கஷ்டப்படுகிறாரே, வைத்தோடுதானா செய்து போடுவார்?' என்று கேட்டாயே என்னை! வைரத்தோடு இல்லாத உன் காதுகளைப் பார்க்கச் சகிக்காமல்தான் அவர் மருந்து போட வரவில்லை என்று நான் சொல்லுகிறேன். இரண்டாயிரம் பெறுமானமுள்ள தோடு போட வேண்டிய காது - இரண்டு சொட்டு மருந்தூற்றி உபசாரம் பண்ண - அவருக்குக் கஷ்டமாயிருக்காதா பாவம்?" என்று ஒரு போடு போட்டேன். சகுந்தலாவின் வைரக் கம்மல் ஆசையைப் பற்றி மூர்த்தியின் காதில் ஒரு வார்த்தை போட்டு வைத்துவிட்டேன்.

பால் பொங்கி விழுந்த நெடி வீசாமலிருப்பதற்கு வேண்டி, பால் புகைக்கிற தணலில் உப்பு போடுவோம்; அது போல, அவர்களுடன் இன்னும் சிறிது நேரம் பேசிவிட்டு, 'நாங்கள் புடவை வாங்குகிறபொழுது அண்டை வீட்டுக்காரியைக் கூப்பிடாமல் கப்சிப்பென்றிருப்பது எனக்கு உவக்குமா? அதனால் சகுந்தலாவை அழைத்துக் கலகம் பண்ணும்படியாடியிற்று,' என்பதைச் சொல்லாமல் சொல்ல வேண்டுமென்று நான் எண்ணமிட்டேன். அப்பொழுது.

"அம்மா! அம்மா" என்ற அழைப்பு ஒலித்தது. மைதிலி பரபரப்புடன் வந்து நின்றாள். மிரள மிரள நின்றாள். "வந்துவிட்டார் அவர்" என்று தடுமாறினாள்.

"யாரு? . . . யாருடி, மாப்பிள்ளையா?"

"ஆமாம் . . . வாசல்லே . . . ."

"எத்தனை நாழியாச்சு?"

"இப்பத்தான் . . . போயேன் நீ, சீக்கிரம்".

"நீயும் வாயேண்டி" என்றேன், படபடப்புடன். மாப்பிள்ளையை வரவேற்க வீட்டில் யாருமில்லையே! அவர் ஆபீஸில்; குழந்தைகள் பள்ளியில் . . . ."

"வரமாட்டேன் போ.... தலைகூடப் பின்னிக் கொள்ளாமல் . . . முடியாத . . . ."

சகுந்தலாவும் மூர்த்தியும் பொருட்செறிவுடன் பார்த்து முறுவலித்ததைக் கண்டுவிட்டு, நானும் அவர்களை அர்த்தபுஷ்டியுடன் நோக்கிவிட்டுப் புறப்பட்டேன். என் ஆசைப் புடவையையும் மாவு படிந்த முந்தாணையையுங்கூட, ஒரு நோட்டம் பார்த்துத் தட்டிவிட்டுக்கொண்டு, "கொஞ்சம் அவளைக் கவனித்துவிட்டு அனுப்பு!" என்று சகுந்தலாவுக்கு உத்தரவிட்டேன். எங்கள் வீட்டு வாசலில் நிற்கும் மாப்பிள்ளை என்ன சங்கடப்படுகிறாரோ என்று ஓட்டோட்டமாய் வந்தேன்.

"அவசரப்படாமல் வாருங்கள், மாமி. தடபுடலே வேண்டாம் எனக்கு. அவள் ஒரே அவசரமாய் எங்கோ ஓடினாள். நீங்கள் இத்தனை அவசரமாய் எங்கிருந்தோ ஓடி வருகிறீர்கள்! நான் எப்படி சகஜமாய் நாலு நாள் முன்னாடி வந்திருக்கிறேனோ, அதுபோல நீங்களும் சகஜமாகப் பழகவேணும்! இல்லாவிட்டால் இப்போதே திரும்பிப் போய்விடுவேன்!" என்று மாப்பிள்ளை என்னை வரவேற்றார், பொற் மிடுக்கும் போலிக் கோபமுமாக!

"மைதிலி வந்துவிடுவாள்!" என்று உரைத்துவிட்டு, அவருடைய வயிற்றுக்கு உணவு அளிக்க, குமுட்டித் தணலைக் கிளறிவிட்டு, என் வேலையில் ஆழ்ந்தேன். ஆசையும் அவசரமுமாய் ஓடி வந்தவருக்கு, வேறு என்ன சொல்லுவேன்?

நெடுந்தூரம் ரயிலில் பயணம் செய்து வந்த அலுப்பும் அழுக்கும் நீங்க அவர் உடை மாற்றிக்கொண்டு தயாராவதற்குள், மைதிலியும் சகுந்தலாவின் உதவியுடன் அழகாகக் கொண்டை போட்டுக் கொண்டு, நிலைக்கண்ணாடியில் அடி முதல் முடி வரை அழகு பார்த்துக்கொண்டு, தைரியமாக வந்து சேருவாள்; அப்புறம் சகுந்தலாவும், மூர்த்தியும் பேசிக்கொள்ளட்டும், ஏசிக்கொள்ளட்டும்! "ஆண்களுக்கு அவசரமே இல்லையே" என்று சகுந்தலா கேட்காமலா இருப்பாள்? எங்கள் மாப்பிள்ளையை உதாரணம் காட்டுவாள்.

** ** **

என் தூது வேலைகளைப் பற்றி என் கணவரிடம் சொல்லிப் பகிர்ந்துகொள்கிற வரைக்கும் எனக்கு இருப்பாக இல்லை. ஒரு வழியாகத் தீபாவளி அமர்க்களம் அடங்கிவிட்டதும் சொல்லிக் கொண்டேன். எனக்குக் கிடைத்த வெகுமதி என்ன?

"ரொம்ப சரி, மாப்பிள்ளையைக் குஷிப்படுத்துகிற மாமியார்தான் நீ. ஆனால் பிள்ளைக்கும், நாட்டுப் பெண்ணுக்கும் சண்டை வந்தால், சமாஸம் செய்து வைப்பாயோ அல்லது அவர்களுடைய சண்டையை ரசிப்பாயோ?" என்று கேட்கிறார் இவர்!

நாட்டுப் பெண் வருவதற்கு மாமாங்கம் பாதி கிடக்கிறது. அதற்குள் என்னுடைய மாமியார்த்தனத்தைக் கற்பனை பண்ணி எடை போடுகிற இவருடைய அவசரம் பாரேன்! பொறுக்குமா எனக்கு? இவருக்கும் எனக்கும் இடையே உள்ள உறவில், நீறுபூத்த கனல்போலவேனும் இருக்குமோ, அந்த மூன்றெழுத்து ஆசை.

**********

(சுதேசமித்திரன், நவம்பர் 11, 1956)